# முதல் திருப்புதல் தேர்வு - 2024

வகுப்பு : 12
காலம் : 3.00 மணி

## பொதுத்தமிழ்

பதிவு எண் 12101
மொத்த மதிப்பெண் : 90

### பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** 14x1 = 14

1. "கூண்டதனை உடைத்தெழுந்த சிங்கம் போலக்
குளிர்பொதிகைத் தென்தமிழே! சீறி வா, வா!" – இவ்வடி இடம் பெற்றுள்ள நூல் ..................
அ) நிலவுப்பூ ஆ) சர்ப்பயாகம் இ) சூரிய நிழல் ஈ) ஒளிப்பறவை

2. உலகப் புவி நாள்
அ) ஏப்ரல்–20 ஆ) ஏப்ரல்–21 இ) ஏப்ரல்–22 ஈ) ஏப்ரல்–23

3. கலிவிழா, ஒலிவிழா என்பவை ........
அ) தைப்பூச விழா, விளக்குத் திருவிழா
ஆ) கடலாட்டு விழா, திருவாதிரை விழா
இ) பங்குனி உத்திர விழா, ஓண விழா
ஈ) எழுச்சி தரும் விழா, ஆரவார விழா

4. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை ................................
அ) அறவோர், துறவோர்
ஆ) திருமணமும், குடும்பமும்
இ) மன்றங்களும், அவைகளும்
ஈ) நிதியமும், சுங்கமும்

5. "குன்று சூழ்வான் மகனொடும் அறுவர் ஆனோம்" –இவ்வடிக் குறிப்பிடும் 'குன்று சூழ்வான் மகன்' யார் ?
அ) சுக்ரீவன் ஆ) குகன் இ) இராமன் ஈ) விடணன்

6. பொருத்தி விடை தேர்க

| | | |
|---|---|---|
| 1. வெங்கதிர் | – | (அ) வினைத்தொகை |
| 2. வளர்ந்த | – | (ஆ) இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை |
| 3. பொய்யா | – | (இ) பண்புத்தொகை |
| 4. அரவக்கடல் | – | (ஈ) பெயரெச்சம் |
| | – | (உ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |

அ) 1–(இ), 2–(ஆ),3–(ஈ),4–(அ)
ஆ) 1–(இ), 2–(ஈ),3–(அ),4–(ஆ)
இ) 1–(இ), 2–(ஈ),3–(உ),4–(ஆ)
ஈ) 1–(இ), 2–(உ),3–(அ),4–(ஈ)

7. அக்காலத்தில் பிள்ளைகளுக்கு ............. தான் சிலேட்டின் நிலையிலிருந்தது. ........ தான் புத்தகம். .......... தான் பேனா. – விடுபட்ட சொற்கள் முறையே
அ) பனையேடு, மணல், எழுத்தாணி
ஆ) மணல், பனையேடு, எழுத்தாணி
இ) மணல், எழுத்தாணி, பனையேடு
ஈ) எழுத்தாணி, மணல், பனையேடு

8. கூற்று – இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர். காரணம் – கிழக்கிந்திய நிறுவனத்தின் வணிகம், துணி சார்ந்ததாகவே இருந்தது.
அ) கூற்று சரி, காரணம் தவறு
ஆ) கூற்று தவறு, காரணம் சரி
இ) கூற்று தவறு, காரணம் தவறு
ஈ) கூற்று சரி, காரணம் சரி

9. "சேரல் இரும்பொறை மன்னர்களின் கல்வெட்டைப் பற்றி எழுதியவர் நீங்கள் தானா ?" என்று யார் யாரிடம் கேட்டது ?
அ) நீலகண்ட சாஸ்திரி, ஐராவதம் மகாதேவனிடம்
ஆ) கே.வி. சுப்பிரமணியனார், ஐராவதம் மகாதேவனிடம்
இ) ஐராவதம் மகாதேவன், நீலகண்ட சாஸ்திரியிடம்
ஈ) ஐராவதம் மகாதேவன், கே.வி. சுப்பிரமணியனாரிடம்


Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

10. 'தலைக்கோல்' பட்டம் பெற்றவர்
அ) நர்த்தகி ஆ) மணிமேகலை இ) கண்ணகி ஈ) மாதவி
11. 'கோடை மழை' கதையின் ஆசிரியர்
அ) சாந்தா தத் ஆ) தமிழ்நதி இ) பூமணி ஈ) சுகந்தி சுப்பிரமணியன்
12. வெண்பா .................. ஆல் அமைய வேண்டும் என்பது இன்றியமையாத விதி.
அ) கலித்தளை ஆ) ஆசிரியத்தளை இ) வெண்டளை ஈ) வஞ்சித்தளை
13. 'பலர் துஞ்சவும் தாம் துஞ்சான்' – விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும்
அ) சோழன் நெடுங்கிள்ளியை, பாணர் ஆ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார்
இ) கணைக்கால் இரும்பொறையை, கபிலர் ஈ) கரிகாலனை, உருத்திரங்கண்ணனார்
14. கடையெழு வள்ளல்களின் வரிசையைச் சாராத மன்னர்கள்
அ) ஆய் அண்டிரனும் அதிகனும் ஆ) நல்லியக்கோடனும் குமணனும்
இ) நள்ளியும் ஓரியும் ஈ) பாரியும் காரியும்

## பகுதி–II

### பிரிவு–1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3x2=6

15. நிலையாமை குறித்து, சவரி உரைக்கும் கருத்து யாது ?
16. இரட்டைக் காப்பியங்கள் என அழைக்கப்படும் நூல்கள் எவை ? ஏன் ?
17. மறக்கக் கூடாதது, மறக்கக் கூடியது எவற்றை ?
18. முகம் முகவரியற்றுப் போனதற்குச் சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணத்தை எழுதுக.

### பிரிவு–2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x2=4

19. 'ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்' என்னும் முழக்கத்தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய் ?
20. சங்க காலத்தில் தாய்வழிச் சமூகமுறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவை ?
21. 'செய்மைக் காட்சித் துணிப்பு' சான்றுடன் விளக்குக.

### பிரிவு–3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7x2=14

22. பேச்சு வழக்கில் தொன்மம் வெளிப்படும் இரு தொடர்களை எழுதுக.
23. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
அ) கண்டான் ஆ) ஈந்த
24. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
அ) பெருங்கடல் ஆ) வானமெல்லாம்
25. உவமைத் தொடர்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.
அ) கிணற்றுத்தவளைபோல ஆ) உள்ளங்கை நெல்லிக்கனிபோல
26. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
தலை, தழை, தளை
27. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
அ) அண்ணைக்கு அவனுக்குப் பணம் குடுத்து ஒதவியிருக்க வேண்டியதுதான.
ஆ) நிலத்தக் கௌறனுமடா அப்பதான் வகுறு நிறையும்
28. மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.
அ) ஆணி அடித்தாற் போல ஆ) வழிவழியாக



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

29. கலைச்சொல்லாக்கம் தருக. அ) Level Crossing ஆ) Visa

குறிப்பு – செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.

தொடரில் உள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.

அ) கோவிந்தன் குடியிருக்க கவர் கட்டி கூரை அமைத்தார்.

30. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

மாணவர்கள் பெற்றோர்களை, தமது நண்பர்களாக பாவித்து நட்புக் கொள்ள வேண்டும். தமது இன்பதுன்பங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்.

## பகுதி–III

### பிரிவு–1

ஏதேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x4 = 8

31. நெடுநல்வாடை –நூற்குறிப்பு எழுதுக.
32. கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமென வள்ளலார் கேட்கிறார் ?
33. 'ஈசன்மகன் நின்றனர் ஓர் ஏழைமெயன ஓர்மின்' – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
34. அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக, தமிழ்நதி கூறுகிறார் ?

### பிரிவு–2

ஏதேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x4 = 8

35. கவிதை நடையியல் கூறுகளில் ஒன்றான தொடரியல் போக்குகள் பற்றி விவரிக்க.
36. 'தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை ?
37. மணலில் எழுதியதுமுதல் தற்காலம்வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.
38. சென்னையின் தொன்மை குறித்துச் சான்றுடன் விளக்குக.

### பிரிவு–3

ஏதேனும் மூன்றனுக்கு விடை தருக. 3x4 =12

39. (அ) சொற்பொருள் பின்வரு நிலையணியைச் சான்றுடன் விளக்குக. (அல்லது)

(ஆ) அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க

இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்.

– இக்குறட்பாவில் பயின்று வரும் அணியைச் சுட்டி விளக்குக.

40. (அ) பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக. (அல்லது)

(ஆ) கூதிர்ப்பாசறை – சான்றுடன் விளக்குக.

41. இலக்கிய நயம் பாராட்டுக. ( மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக.)

அந்தியிருளாற் கருகும் உலகு கண்டேன்
அவ்வாறே வான்கண்டேன், திசைகள் கண்டேன்
பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ ?
பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்
சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென் றேஇயற்கை அன்னை வானில்
எழில்வாழ்வைச் சித்தரித்த வண்ணந் தானோ ?

–பாரதிதாசன்



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

42. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக.

(அ) குன்றின் மேலிட்ட விளக்கு போல (அல்லது)

(ஆ) தினை விதைத்தவன் தினை அறுப்பான். வினை விதைத்தவன் வினை அறுப்பான்.

43. தமிழாக்கம் தருக.

Periyar was not only a great social revolutionary ; he was something more than that. He is known as a great champion of the underprivileged ; even in this sphere he was much more than that. His sphere of activity was very wide and when he took up any issue he went deep into it, understood all the aspects of it and did not rest until he had found a permanent solution to it. Communal differences in our society were deep - tooted and appeared to be permanent features of our society until Periyar came on the scene.

43. செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.

பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

'வசனநடை கைவந்த வல்லாளர்' எனப் புகழப்படும் ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணம் நல்லூரில் பிறந்தவர். தமிழ், வடமொழி, ஆங்கிலம் எனும் மும்மொழிப் புலமை பெற்றவர். திருக்குறள் பரிமேலழகர் உரை, சூடாமணி திகண்டு, நன்னூல் – சங்கர நமச்சிவாயர் விருத்தியுரை என்று பல நூல்களைப் பதிப்பித்தார். இலக்கண நூல்கள், பூமி சாஸ்திரம் முதலான பாட நுல்கள் அவரால் ஆக்கப்பட்டன. புராண நூல்களை வசனமாக எழுதி அதனை அனைவரும் படிக்கும் எளிய வடிவாக மாற்றினார். தமது இல்லத்தில் அச்சுக்கூடம் நிறுவிப் பல நூல்களை அச்சிட்டார். திருவாவடுதுறை ஆதினம் இவருக்கு 'நாவலர்' பட்டம் வழங்கியது. பெர்சிவல் பாதிரியார் விவிலியத்தைத் தமிழில் மொழிபெயர்க்கவும் இவர் உதவினார்.

வினாக்கள்

1. 'வசனநடை கைவந்த வல்லாளர்' எனப் புகழப்படுபவர் யார் ?
2. ஆறுமுக நாவலர் பதிப்பித்த நூல்கள் யாவை ?
3. ஆறுமுக நாவலருக்கு 'நாவலர்' பட்டம் யாரால் வழங்கப்பட்டது ?
4. விவிலியத்தைத் தமிழில் மொழிபெயர்த்தவர் யார் ?

## பகுதி–IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 3x6 = 18

44. (அ) அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணைநிற்கும் என்பதை வள்ளுவம்வழி நின்று நிறுவுக.

(அல்லது)

(ஆ) கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவனவற்றை விவரிக்க.

45. (அ) நிருவாக மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

(ஆ) மயிலையார் ஓர் 'ஆராய்ச்சிப் பேரறிஞர்' என்னும் கூற்றினைச் சான்றுகளுடன் கட்டுரைக்க.

46. (அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்துகொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.

(அல்லது)

(ஆ) மகாநடிகரைக் கண்ட பாலச்சந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

## பகுதி– V

47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக. 4+2 = 6

(அ) 'துன்பு உளது .............' எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை எழுதுக.

(ஆ) 'அஃகாமை .....................' எனத் தொடங்கும் குறளை எழுதுக.

SS PRITHVI
www.Padasalai.Net